



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.11.2024) தஞ்சாவூர் மாவட்டம், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.43.58 கோடி செலவில் முடிவுற்ற 127 திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.28.26 கோடி மதிப்பீட்டிலான 2 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 14,525 பயனாளிகளுக்கு ரூ.154 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் முனைவர் கோவி. செழியன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, ச.முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை). என்.அசோக்குமார் (பேராவூரணி), முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்), மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன் (தஞ்சாவூர்), க.சரவணன் (கும்பகோணம்), மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பா.பிரியங்கா பங்கஜம், மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி (தஞ்சாவூர்), மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர். உஷாபுண்ணியமூர்த்தி, துணைத் தலைவர் கூ.க.முத்துச்செல்வம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# “திராவிட மாடல் அரசின் முகங்களே, மக்கள்தான்! மக்களின் மகிழ்ச்சியே அரசின் லட்சியம்!”

## தஞ்சாவூரில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

தஞ்சாவூர்,நவ.9 -

**தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசினார்.**

**அப்போது ரூ.44 கோடி மதிப்பில் முடிவுற்றுள்ள 127 திட்டப்பணிகளை திறந்து வைத்து, ரூ.28.26 கோடி மதிப்பிலான புதிய கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், 14,525 பயனாளிகளுக்கு பல்வேறு புதிய திட்டங்களின் கீழ் 154 கோடி ரூபாய் அளவுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 9,984 சகோதரிகளுக்கு ரூ.67 கோடியே 19 லட்சம் அளவுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார்.**

இதைத்தொடர்ந்து நலத்திட்ட உதவிகளைப் பெற்ற அத்தனை பயனாளிகளையும் வாழ்த்தி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

அவரது உரை வருமாறு:

தஞ்சை மாவட்டத்தில் நடைபெறுகின்ற இந்த அரசு விழாவில், 15 ஆயிரம் பயனாளிகளுக்கு 154 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த மூன்று நாட்களாகவே விழுப்புரம், திருச்சி மாவட்டங்களில் ஏராளமான அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுவிட்டு, இன்று தஞ்சைக்கு உங்களையெல்லாம் சந்திக்க வருகை தந்து இருக்கிறேன். இந்த நிகழ்ச்சியில், தஞ்சை மாவட்டத்தின் 1,000 மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு, சுமார் 68 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக்கடன் இணைப்புகளை வழங்க இருக்கிறோம்.

### 850 பேருக்கு வேலை வாய்ப்பு

சுமார் 850 பேருக்கு, மாவட்ட வேலை வாய்ப்பு மையம் வழியாக, பணி நியமன ஆணைகளை இங்கு வழங்க இருக்கிறோம். 80 மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்கூட்டர் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளைக் கொடுக்க இருக்கிறோம்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, வேளாண்மைத்துறை, கூட்டுறவுத்துறை, சமூக நலத்துறை என நம் திராவிட மாடல் அரசின் பல்வேறு துறைகளின் சார்பாகவும், பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகளை இங்கு மக்களுக்குக் கொடுக்க இருக்கிறோம்.

உங்கள் ஒவ்வொருவரின் முகங்களையும் காணும்போது எனக்கு மிகுந்த நெகிழ்ச்சி ஏற்படுகிறது, மகிழ்ச்சி ஏற்படுகிறது. உற்சாகம் பிறக்கிறது. ஏனென்றால், நம் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் உங்கள் ஒவ்வொருவரின் குடும்பத்தையும் எட்டிப் பார்க்கின்றன.

மாவட்டம், ஒன்றியம், நகரம் என்றில்லாமல் ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள தனி மனிதர்களுக்கும் தேவையான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் பார்த்து, பார்த்து வழங்கிக்கொண்டு இருக்கிறார். உங்களின் மகிழ்ச்சிதான் இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு ஒரே சாட்சி.



### ஆண்களுக்கு நிகராக...

குறிப்பாக, இங்கு நிறைய மகளிர் வருகை தந்து இருக்கிறீர்கள். `மகளிர் ஆண்களுக்கு நிகராக மட்டுமல்ல, ஆண்களை விடவும் பல்வேறு உயரங்களைத் தொட வேண்டும்’ என்றுதான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக, மகளிர் சுயஉதவிக் குழுக்களை, தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள்.

நம் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, கடந்த மூன்றரை ஆண்டுகளில் 95 ஆயிரத்து 176 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக்கடன் இணைப்புகளை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார். அதன் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு இந்த மேடையில் சுமார் ஆயிரம் குழுக்களுக்கு 68 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக்கடன் இணைப்புகள் வழங்கப்படுகின்றன.

சுயஉதவிக் குழுக்கள்

இந்த வங்கிக்கடன் இணைப்புகளை எல்லாம், நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குக் கொடுக்கின்ற கடன்தொகையாகப் பார்க்கவில்லை. மாறாக, சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளான உங்கள் உழைப்பின் மீது இருக்கின்ற நம்பிக்கையாகத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் பார்க்கிறார்.

அதுமட்டுமல்ல, மகளிரின் உழைப்பை அங்கீகரிக்கும் விதமாக அவர்களின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்திட வேண்டும் என்று, நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை இந்த மூன்றரை ஆண்டுகளில் தந்து இருக்கிறார்.

ஆட்சிப்பொறுப்பை ஏற்றதுமே, முதல் கையெழுத்து. பேருந்துகளில் மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் செய்வதற்கான விடியல் பயணம் திட்டத்தினைச் செயல்படுத்தினார். அந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதம் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். அதேபோல் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்வி சேர்கின்ற ஒவ்வொரு மாணவிக்கும் மாதம் தலா ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கிச் சிறப்பித்து வருகிறார்.

### மூன்று லட்சம் மாணவிகள்

இந்தத் திட்டத்தின் மூலம் மூன்று லட்சம் மாணவிகள் பயனடைந்து வருகிறார்கள். மாணவிகளுக்கு மட்டுமல்ல, மாணவர்களுக்கும் அதேபோல் ஒரு திட்டம். அதுதான் தமிழ்புதல்வன் திட்டம். மகளிர் காலையில் சீக்கிரம் எழுந்து உணவு சமைக்கச் சிரமப்படக்கூடாது என்று இந்தியாவிலேயே முதன்முறையாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இதன் மூலம் அரசுத் தொடக்கப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறுகின்ற தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை, படிக்கின்ற 20 லட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் மாதம் ஆயிரம் ரூபாய் பெற்று வருகிறார்கள். நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளுக்குப் பல்வேறு திசைகளிலிருந்தும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

### இந்தியாவிலேயே முதலிடம்

இந்திய அளவில் கல்வி, சுகாதாரம், நகர்ப்புற மேம்பாடு, மகளிர் பாதுகாப்பு, மகளிர் முன்னேற்றம் இப்படி 13 துறைகளில் தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கிறது என்று நான் கூறவில்லை, ஒன்றிய அரசின் `நிதி ஆயோக் அமைப்பு’ தெரிவிக்கிறது.

அதேபோல், தொழில்துறையில் சிறந்து விளங்குகின்ற மாநிலம் என்ற ஒன்றிய அரசின் புள்ளியியல் துறையில் நம் அரசும் முதல் இடத்தில் இருக்கிறது. பாராட்டி வருகிறது.

இந்தியாவிலேயே பணிக்குச் செல்கின்ற பெண்களில் 42 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டு மகளிர் என்பது, நம் தமிழ்நாட்டிற்குக் கிடைத்து இருக்கின்ற கூடுதல் பெருமை.

நம் முதலமைச்சர் அவர்கள், அவரின் கனவுத் திட்டம் நான் முதல்வன் திட்டத்தை இந்தியா முழுவதும், ஏன் இன்று உலகம் முழுவதும் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கெல்லாம் மேலாக டெல்டா பகுதிகளில் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்கிட வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறார்.

முதற்கட்டமாக, நம் பகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்திட 2023-இல் `டைடல் நியோ’ தொழில்நுட்பப் பூங்காவை அறிவித்தார். சென்னைக்கு வெளியே அறிவிக்கப்பட்ட முதல் தொழில்நுட்பப் பூங்கா இந்தத் தஞ்சை மாவட்டத்திற்குத்தான். ஜூன் 2023-இல் தொடங்கப்பட்ட இதன் கட்டுமானப் பணி 15 மாதங்களில் முடிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

திறந்து வைக்கப்பட்ட பத்தே மாதங்களிலேயே பல்வேறு நிறுவனங்களால் முழுவதும் நிறைந்துள்ளது டைடல் நியோ பார்க். இதன் மூலம் சுமார் 600 பேருக்கு இன்றைக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டத்தின் முதல் தொழிற் பூங்கா சிப்காட் செங்கிப்பட்டியில் அறிவிக்கப்பட்டுள்ளது. 172 ஏக்கரில் அமைய உள்ள இதற்கான முதற்கட்டப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

இதன் மூலம் கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வசதிகள் கிடைக்கும். இந்தத் திட்டங்களையெல்லாம் பெறுகின்ற உங்களை நம் அரசு வெறும் பயனாளிகளாகப் பார்க்கவில்லை. பங்கேற்பாளர்களாகப் பார்க்கிறது. நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களைச் சாதனைகளை, பயன்களை நீங்கள் இன்னும் பல பேருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

### உற்றார் உறவினர்கள்

உங்களின் நண்பர்கள், உற்றார், உறவினர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். ஏனென்றால் திராவிட மாடல் அரசின் முகங்களே மக்களாகிய நீங்கள்தான். நீங்கள்தான் நம் கழக அரசின், திராவிட மாடல் அரசின் பிராண்ட் அம்பாசிடர்ஸ். எனவே, உங்களுக்காக உழைத்திட, நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து, உழைத்திட நாங்கள் என்றுமே தயாராக இருக்கிறோம் என்பதை மீண்டும் ஒரு முறை அழுத்தமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இங்கு நலத்திட்டங்களைப் பெற்ற அத்தனைப் பேருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளையும், இதை ஒருங்கிணைத்த மாவட்ட ஆட்சியருக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் மீண்டும் என் பாராட்டுகளையும், வாழ்த்தையும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கோவி.செழியன், டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, எஸ்.கே, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், ஜவஹிருல்லா, டி.கே.ஜி.நீலமேகம், சாக்கோட்டை அன்பழகன், அண்ணாதுரை, அசோக்குமார், தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், கும்பகோணம் மாநகராட்சி மேயர் சரவணன், மாவட்ட ஆட்சித் தலைவர் பிரியங்கா பங்கஜம், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, மாநகராட்சித் துணை மேயர் மருத்துவர் அஞ்சுகம் பூபதி, ஒன்றிய அரசின் முன்னாள் அமைச்சர் பழனி மாணிக்கம், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் முத்துச்செல்வம், மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், ஊராக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் முனைவர் பாலகணேஷ், தஞ்சை மாநகராட்சி ஆணையர் எஸ்.கண்ணன், கும்பகோணம் மாநகராட்சி ஆணையர் இலச்சுவன் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

## மலைவாழ் மக்களுக்கு உதவிட

# ரூ.1.64 கோடியில் 25 இருசக்கர மருத்துவ வாகனங்கள்!

## தமிழ்நாடு அரசு ஆணை!

சென்னை, நவ. 9 -

மலைவாழ் மக்களுக்கு 25 இருசக்கர அவசரகால மருத்துவ வாகனங்கள் (Bike Ambulance) வாங்க தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அணுகுவதற்கு கடினமான மற்றும் போக்குவரத்து வசதியற்ற மலை கிராமப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் மற்றும் இதர மக்களின் அவசர மருத்துவ சேவைகளுக்காக முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் 25 இருசக்கர அவசர கால மருத்துவ வாகனங்கள் 1.60 கோடி ரூபாய் செலவில் வாங்குவதற்கு தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

இவ்வாகனங்கள் 108 அவசரகால ஊர்திகளுக்கு இணைப்பு வாகனங்களாக (Feeder Ambulance) செயல்பட்டு, நோயாளிகளை மருத்துவமனைக்கு துரிதமாக அழைத்துச் செல்ல வழிவகுக்கும். மாநிலம் முழுவதும் உள்ள எளிதில் அணுக முடியாத மலைக் கிராமங்கள் மற்றும் மலைப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர்களின் சுகாதார சேவையை மேம்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

போக்குவரத்து வசதி இல்லாத மலைப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு குறித்த நேரத்தில் உரிய மருத்துவ சேவை கிடைப்பதை இந்த இரு சக்கர அவசரகால வாகன சேவை உறுதி செய்யும்.

நவீன முறையில் உரிய மருத்துவ உபகரணங்கள் பொருத்தப்பட்ட இரு சக்கர அவசரகால வாகன சேவையானது, தற்போதுள்ள 1353 அவசரகால 108 ஊர்தி சேவையினுள் அடங்கும். இந்த இரு சக்கர அவசரகால வாகனங்களின் சேவை கடைநிலை பயனாளர் வரை சென்றடையும். இந்த வாகனமானது உடனடி மருத்துவ சிகிச்சை அளித்து பயனாளிகளை மேல் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதில் முக்கிய பங்கு வகிக்கும்.

### சேவையின் சிறப்பம்சங்கள்

**தாய்சேய்நல சுகாதார சேவைகள்:**

மகப்பேறுக்கு முந்தைய பராமரிப்பு, மகப்பேறு, பாதுகாப்பான பிரசவ போக்குவரத்து மற்றும் தாய்சேய் நல மருத்துவ பரிசோதனைகளுக்கான சேவை.

அவசரகால மருத்துவப் பராமரிப்பு:

மருத்துவ மற்றும் எதிர்பாராத அவசரநிலைகளில் உதவுவதற்கு ஏற்றவாறு இவ்வாகனம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வசதியற்ற பகுதிகளில் உள்ள பயனாளிகளை உரிய 108 அவசர கால வாகனங்கள் உள்ள இடங்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கான இணைப்பு வாகனமாக இவ்வாகனங்கள் செயல்படும்.

எளிதில் அணுக முடியாத, 10 மாவட்டங்களில் உள்ள மலைக் கிராமங்களை தேர்ந்தெடுத்து, அங்கு வாழும் பழங்குடியின மக்களுக்கும் மற்றும் இதர மக்களுக்கும் இந்த இருசக்கர முதலுதவி வாகனங்கள் உடனடி சேவை செய்யும்.

இந்த இருசக்கர அவசரகால வாகனத்தில் ஜிபிஎஸ் (GPS) கருவி பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

---

முரசொலி விநியோக மேலாளர் டி.கண்ணன் – நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் டி.அண்ணாதுரை தாயார்

# குள்ளம்மாள் தங்கவேல் நான்காம் ஆண்டு நினைவு நாள்!

## கழகத்தினர் பங்கேற்பு!

கடலூர், நவ. 9 -

கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் ஒன்றிய கழக துணைச் செயலாளர், பூலாம்பாடி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் அரசு மேல்நிலைப் பள்ளி பெற்றோர் - ஆசிரியர் கழக தலைவர் டி.அண்ணாதுரை, கோயம்பேடு மார்க்கெட் பழக்கடை டி.மனோகரன் மற்றும் முரசொலி விநியோக மேலாளர் டி.கண்ணன் ஆகியோரின் தாயார் குள்ளம்மாள் தங்கவேல் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு தினம் நாளை (10.11.2024 - ஞாயிற்றுக் கிழமை) அனுசரிக்கப்படுகிறது.

கடந்த 24.12.2020 ஆம் ஆண்டு நடைபெற்ற அம்மையாரின் படத்திறப்பு நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணிச் செயலாளர்–துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு அம்மையாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்.



இந்நிகழ்ச்சியில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் மற்றும் மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, நகர கழக, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னணியினர், தொ.மு.ச. நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிலையில் அம்மையாரின் நான்காம் ஆண்டு நினைவு தினம் நாளை (10.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில், கடலூர் மேற்கு மாவட்டம், நல்லூர் வடக்கு ஒன்றியம், வேப்பூர் அருகில் உள்ள பூலாம்பாடி கிராமம், அவரது இல்லத்தில் அம்மையாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் உறவினர்கள் - கழகத்தினர் கலந்து கொள்கிறார்கள்.